மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பகுத்தறிவுக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு கருத்தை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். பல அரசியல் மாச்சரியங்களின் காரணமாக வக்ப் போர்ட் தலைவர் மீது சிலபேர் தவறான தகவல்களைக் கொடுத்து இருக்கிறார்கள். நாம் மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருக்கிறோம். வட நாட்டிலே இருக்கின்ற முஸ்லீம் ஒருவர் கூட இந்துக் கோயில் களுக்கு தமது நிலங்களை எழுதிக் கொடுத்திருக்கின்றார். ஆகவே மற்ற மதங்களின் விழாக்களுக்குச் செல்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு இந்தக் கோட்பாட்டிலே நம்பிக்கை இல்லை என்று சொல்கின்ற அந்தப் போக்குகளை நாம் தயவு செய்துஉற்சாகப்படுத்தி விடக்கூடாது. நூற்றுக்குநூறு தகுதியும், இந்தக் கோட்பாட்டிலே முழு நம்பிக்கையும் கொண்டு நடந்து வருகின்ற ஒருவரைத்தான் இந்த வக்ப் வாரியம் தலைவராகப் பெற்றிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இந்த மதத்தில் நம்பிக்கை உடையவர்கள்தான் வக்ப் வாரியத்திலே அங்கத்தினர்களாக அங்கம் வகிக்கிறார்கள் என்று சொன்னார்கள், ஆனால் இந்து அறநிலையத்துறையைபொறுத்தவரையில் மத நம்பிக்கையற்றவர்களை நியமிக்கின்றர்களே, அதற்கென்ன காரணம்? ஆகவே இதிலேயும் மத நம்பிக்கையற்றவர்களைப் போடக் கூடாதா என்று அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இதற்கு நான் பதில் சொல்வது முறையாக இருக்காது என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி தொகுதியிலுள்ள தோவாளைக் கால்வாய்.

*வினா எண். 96— திரு. சு முத்துக்கிருஷ்ணன் மாண்புமிகு நீர்ப்பசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதியில் உள்ள தோவாளை சானலில் சேதமடைந்துள்ள கரைகளும், மதகுகளும் சரி செய்யப்படாமல் உள்ளதா?

(ஆ) இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோவாளைக் கால்வாயின் சேதமடைந்த கரைகளும் மதகுகளும் ரூ. 4,51,270 செலவில் செப்பனிடப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் விடப்பட்டுள்ளது.